## ஸ்ரீவில்லிபுத்தூர் நகர்மன்றம்
## சாதாரணக் கூட்டம்

***2021 ம் ஆண்டு ஜீன் மாதம் 30 ம் நாள் புதன்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.***

*முன்னிலை :- திருமதி. D. மல்லிகா, B.Sc,*
*தனி அதிகாரி.*

**பொருள் எண் : 144**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண் 2571/2017/J2, Date:23.04.2018 ல் நகர்புறங்களில் டெங்கு தடுப்பு பணியை துரிதபடுத்தவும், மேலும் நகர் பகுதியில் டெங்கு காய்ச்சல் ஏற்பட காரணமாக உள்ள கொசுபுழுக்களை கண்டறியும் பணியை DBC களப்பணியாளர்களை பயன்படுத்தி கணக்கெடுத்து உரிய படிவத்தில் அறிக்கை தயார் செய்து தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி இந்நகராட்சி பகுதியில் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிக்கு கொசுபுழு உற்பத்தியாகும் இடங்களை கண்டறிந்து களத்தில் குறிப்பிடுவதற்கு 50000 அளவீட்டு படிவங்கள் அச்சடித்து பெறுவதற்கான உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.70000/- செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. மேற்படி அளவீட்டு படிவங்களை அச்சடித்து பெறும் பணிக்கு நகராட்சி ஆணையாளர் அவர்களின் 11.06.2021 ல் முன் அனுமதி வழங்கியுள்ளார்கள். 10.05.2021 முதல் 21.06.2021 முடிய அரசு ஊரடங்கு அமுலில் உள்ளதால் ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கான சூழல் இல்லை. எனவே நகரில் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிக்கு தேவையான அளவீட்டு படிவங்களை, பொது சுகாதார நலன் கருதி அவசர அவசியமான பணி என்பதால் அளவீட்டு படிவங்களை அச்சடித்து தரும் பணிக்கு தகுதி வாய்ந்த அச்சக நிறுவனங்களிடமிருந்து 11.06.2021 அன்று மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டது அதன் விவரம் கீழ்க்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வரிசை எண் | நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | எண்ணிக்கை | இரு பக்கங்களுக்கு | விலைப்புள்ளி தொகை ஜி.எஸ்.டி. உட்பட மொத்தம். |
|---|---|---|---|---|
| 1 | கோதா விலாஸ் ஆப்செட்,<br>68A, வடக்குரதவீதி,<br>ஸ்ரீவில்லிபுத்தூர். | 50000 | இரண்டு | 57000/- |
| 2 | ஸ்ரீ பழனியாண்டவர் அச்சகம்,<br>2, மாரியம்மன் கோவில் செக்கடித் தெரு,<br>பைபாஸ் ரோடு ( முருகன் கோவில் )<br>ஸ்ரீவில்லிபுத்தூர். | 50000 | இரண்டு | 59500/- |
| 3 | ஸ்ரீ பரமேஸ்வரி பிரிண்டர்ஸ்,<br>38Q, பெருமாள்பட்டி பிள்ளைமார் தெரு,<br>கீழத் தெரு காமராசர் சிலை பின்புறம்,<br>ஸ்ரீவில்லிபுத்தூர். | 50000 | இரண்டு | 59900/- |

**அலுவலகக்குறிப்பு :-**

1) மேற்காண் மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண் 1 ல் காணும் கோதா விலாஸ் ஆப்செட் 68A, வடக்குரதவீதி ஸ்ரீவில்லிபுத்தூர் நிறுவனம் தந்துள்ள விலைப்புள்ளியை ஏற்கலாம். மேற்படி பணியின் அவசர அவசியத்தினை முன்னிட்டு வினியோக உத்திரவு வழங்கியதையும் மன்றம் ஏற்கலாம்.
2) மன்ற அனுமதியை எதிர்நோக்கி தொடர் நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண் 3486/2021/H1**

**தீர்மானம் :- அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 145**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் 10/03/2021 ம் தேதிய சுற்றறிக்கையின்படி நகராட்சி பகுதியில் கோவிட் 19 இரண்டாம் அலை தாக்கத்தை முற்றிலும் தடுக்கும் வகையில் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறும், கொரோனா பெருந்தொற்று நோய் பரவாமல் தடுப்பதற்குரிய கிருமி நாசினி மருந்தை உடனடியாக கொள்முதல் செய்து இருப்பில் வைத்து பயன்படுத்துமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி கோவிட் 2019 இரண்டாம் அலை தொற்று நோய் தடுப்பு பணிக்கு நகர் முழுவதும் தெளிப்பதற்கு தேவையான கிருமி நாசினி லைசால் 1000 லிட்டர் உடனடியாக கொள்முதல் செய்யவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.18000/- க்கு மன்றத்தின் அனுமதி வைக்கப்படுகின்றது. மேற்படி லைசால் கிருமி நாசினி கொள்முதல் செய்வதற்கு தற்போது 10.05.2021 முதல் கொரோனா நோய் தொற்று காரணமாக ஊரடங்கு அமுலில் உள்ளதால் ஒப்பந்தப்புள்ளி கோருவதற்குரிய சூழல் இல்லை. எனவே பொது சுகாதார நலன் மற்றும் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ் கிருமி நாசினி விநியோகம் செய்யும் பொருட்டு தகுதி வாய்ந்த நிறுவனங்களிடமிருந்து 14.06.2021 அன்று மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அதன் விவரம் கீழ்கண்டவாறு பார்வைக்கு அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வரிசை எண் | நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | அளவு லிட்டரில் | ஒரு லிட்டருக்கு விலைப்புள்ளி தொகை ஜி.எஸ்.டி உள்பட மொத்தம் ரூ. | மொத்தம் ரூ. |
|---|---|---|---|---|
| 1 | ஸ்ரீ ஹரி கெமிக்கல்ஸ் ஏஜென்சிஸ்,<br>2/74 ஸ்கூல்தெரு, கடம்பன் குளம் அச்சன்குளம் போஸ்ட், ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுகா. | 1000 | 166.50 | 166500/- |
| 2 | எஸ்.பி.வி. டிரேடர்ஸ்,<br>148/1B1 வடக்கு தெரு, பழைய பாளையம், ராஜபாளையம் தாலுகா. | 1000 | 172.50 | 172500/- |
| 3 | வானதி கெமிக்கல்ஸ் அண்ட் சப்ளையர்ஸ்,<br>154, கோதண்ட ராஜா தெரு, ராஜபாளையம். | 1000 | 181.50 | 181500/- |

**அலுவலகக்குறிப்பு:-** மேற்காண் மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண் 1 ல் காணும் ஸ்ரீ ஹரி கெமிக்கல்ஸ் ஏஜென்சிஸ் 2/74 ஸ்கூடல் தெரு கடம்பன்குளம் அச்சன்குளம் போஸ்ட் ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுகா என்ற நிறுவனம் தந்துள்ள குறைந்த விலைப்புள்ளியை ஏற்று தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ் விநியோக உத்திரவு வழங்கியதையும் மன்றம் ஏற்கலாம்.

**தீர்மானம் :- அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 146**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு 3 ல் பணியாற்றி வரும் திரு. ந. பாலகுமார், தூய்மைப் பணியாளர் தனது தாய் தந்தை ஆகியோருக்கு ஒரே மகன் என்பதாலும் வயது முதிர்ந்த அவர்களை உடன் இருந்து கவனிக்க வேண்டியுள்ளது எனவும் தான் திருமணமாகி 5 மாதங்கள் ஆவதால் தனது குடும்ப சூழ்நிலை காரணமாக தன்னை அருப்புக்கோட்டை நகராட்சிக்கு பணியிடமாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். தனியரின் விண்ணப்பத்தின்படி அருப்புக்கோட்டை நகராட்சிக்கு பணியிட மாற்றம் செய்ய நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருநெல்வேலி அவர்களுக்கு பரிந்துரை செய்து விண்ணப்பத்தினை அனுப்பி வைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-** அனுமதிக்கலாம்.

**ந.க.எண் 3428/2021/H1**

**தீர்மானம் :- அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 147**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி கிருஷ்ணன் கோவில் தெருவில் உள்ள கழிப்பிடம் பல ஆண்டுகளாக பராமரிப்பு செய்யப்படாமல் பழுதடைந்துள்ளது. மேற்கண்ட கழிப்பிடத்தினை சுற்றி உள்ள வீடுகளில் கழிப்பிடம் கட்ட இட வசதி இல்லாத வீடுகளில் வசிப்பவர்கள் பயன்படுத்துவதற்காக மேற்கண்ட சமுதாய கழிப்பிடத்தினை பழுது பார்க்கவும் அதற்காக ரூ.1,00,000/- க்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு :-** கிருஷ்ணன் கோவில் தெரு கழிப்பிடத்தினை பழுது பார்க்கவும் அதற்காக ரூ.1,00,000/- க்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கும் நிர்வாக அனுமதி வழங்கலாம். வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**ந.க.எண் 3386/2021/E1**

**தீர்மானம் :- அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 148**

ஸ்ரீவில்லிபுத்தூர் முதலியார் பட்டித் தெருவில் சின்டெக்ஸ் பழுது பார்க்கும் பணிக்கு 28.06.2021 ம் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் பின்வரும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வ.எண் | ஒப்பந்தக்காரர் பெயர் | மதிப்பீட்டிற்கு விலை விகிதம் |
|---|---|---|
| 1 | திரு. அ. பாபு, ஒப்பந்தக்காரர், ஸ்ரீவில்லிபுத்தூர். | மதிப்பீட்டை விட 0.19 % குறைவு |
| 2 | திரு. வி. அழகர்ராஜ், ஒப்பந்தக்காரர், ஸ்ரீவில்லிபுத்தூர். | மதிப்பீட்டை விட 5.04 % அதிகம் |

மேற்கண்ட பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. அ. பாபு, ஒப்பந்தக்காரர், ஸ்ரீவில்லிபுத்தூர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.19 % குறைவாக உள்ளதால் அன்னாரின் ஒப்பந்தப்புள்ளியினை ஒப்புக் கொள்ள மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

1) மேற்கண்ட பணியினை ரூ.1,20,000/- மதிப்பீட்டில் குடிநீர் பிரிவு நிதியில் மேற்கொள்ள 31.05.2021 ல் மன்ற ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.
2) பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப் புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. அ. பாபு என்வரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.19 % குறைவாக உள்ளதால் அன்னாரின் ஒப்பந்தப்புள்ளியினை ஒப்புக் கொள்ளலாம்.

**ந.க.எண் 2590/2021/E1**

**தீர்மானம் :- அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 149**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி நகரில் உள்ள சிறு மின்விசை இறைப்பான்களில் உள்ள மோட்டார்கள் பழுது பார்த்தல் ( 2021-22) பணிக்கு 28.06.2021 ம் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் பின்வரும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வ.எண் | ஒப்பந்தக்காரர் பெயர் | மதிப்பீட்டிற்கு விலை விகிதம் |
|---|---|---|
| 1 | திரு. அ. பாபு, ஒப்பந்தக்காரர், ஸ்ரீவில்லிபுத்தூர். | மதிப்பீட்டை விட 0.13 % குறைவு |
| 2 | திரு. வி. அழகர்ராஜ், ஒப்பந்தக்காரர், ஸ்ரீவில்லிபுத்தூர். | மதிப்பீட்டை விட 1.82 % அதிகம் |

மேற்கண்ட பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. அ. பாபு, ஒப்பந்தக்காரர், ஸ்ரீவில்லிபுத்தூர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.13 % குறைவாக உள்ளதால் அன்னாரின் ஒப்பந்தப்புள்ளியினை ஒப்புக் கொள்ள மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

1) மேற்கண்ட பணியினை ரூ.6,00,000/- மதிப்பீட்டில் குடிநீர் பிரிவு நிதியில் மேற்கொள்ள தனி அலுவலர் முன் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.
2) பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப் புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. அ. பாபு என்வரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.13 % குறைவாக உள்ளதால் அன்னாரின் ஒப்பந்தப்புள்ளியினை ஒப்புக் கொள்ளலாம்.

**ந.க.எண் 2945/2021/E1**

**தீர்மானம் :- அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் : 150</u>**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி அலுவலக மின் இணைப்பு எண் 3 ல் உள்ள மின் வயர்கள் முற்றிலும் பழுதடைந்து மின் இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளது. அதனை சரி செய்ய மின் பொருள்கள் வாங்கவும் அதற்கான செலவு தொகை ரூ.6800/- க்கும் மன்றத்தின் அனுமதிக்கு. அவசர அவசியம் கருதி உடன் சரி செய்து மின் இணைப்பு வழங்க வேண்டியுள்ளதால் தனி அலுவலர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று 29.06.2021 ம் தேதி விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் பெறப்பட்ட பின்வரும் 3 விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

| வ. எண் | பணி விவரம் | திரு. எம். முத்துராமகிருஷ்ணன், ஸ்ரீவில்லிபுத்தூர். | | செல்வம், எலக்ட்ரிக்கல்ஸ், ஸ்ரீவில்லிபுத்தூர். | | திரு. தங்கவேல், ஸ்ரீவில்லிபுத்தூர். | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | நகராட்சி அலுவலக மின் இணைப்பு எண் 3 ல் உள்ள மின் வயர்கள் முன்றிலும் பழுதடைந்துள்ளதை சரி செய்ய மின் பொருள்கள் வாங்க | 6787.50 | 6787.50 | 7184.90 | 7184.90 | 7371.50 | 7371.50 |

மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு. எம். முத்துராமகிருஷ்ணன், ஸ்ரீவில்லிபுத்தூர் என்பவரின் விலைப்புள்ளியை ஒப்புக் கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**

அலுவலக மின் இணைப்பு எண் 3 ல் உள்ள மின் வயர்கள் சரி செய்ய குடிநீர் பிரிவு நிதியில் மின் பொருள்கள் வாங்கவும் அதற்கான செலவு தொகை ரூ.6800/- க்கும் மன்றம் அனுமதி வழங்கலாம். குறைந்த விலைப்புள்ளி ஒப்புக் கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். தனி அலுவலர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று பணி ஆணை வழங்கியதை மன்றம் அங்கீகாரம் செய்யலாம்.

**ந.க.எண் 3710/2021/E1**

**<u>தீர்மானம் :- அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் எண் : 151</u>**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள தண்ணீர் தேக்க தொட்டியில் இருந்து ஊரணிப்பட்டி மேல்நிலை தொட்டிக்கு நீர் ஏற்றும் 20 எச்.பி. மின் மோட்டார் பழுதடைந்துள்ளது, குடிநீர் விநியோக அவசர அவசியம் கருதி மேற்கண்ட மோட்டாரில் ரீ வைண்டிங் செய்யவும் திரஸ்ட் பேடு, காப்பர் ரோட்டார் மாற்றுதல் பம்ப் சாப்ட் சரி செய்தல் உடனடியாக மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே மேற்கண்ட மோட்டார் உடனடியாக பழுது பார்க்கவும் அதற்கான செலவு தொகை ரூ.27,000/- க்கு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ் அனுமதிக்கப்பட்டது. மேற்கண்ட பணிக்கு 29.06.2021 ம் தேதி விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் பெறப்பட்ட பின்வரும் 3 விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

| வ. எண் | பணி விவரம் | திரு. எம். முத்துராமகிருஷ்ணன், ஸ்ரீவில்லிபுத்தூர். | | செல்வம், எலக்ட்ரிக்கல்ஸ், ஸ்ரீவில்லிபுத்தூர். | | திரு. தங்கவேல், ஸ்ரீவில்லிபுத்தூர். | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 20 HP மின் மோட்டார் கழற்றி ரி வைண்டிங் செய்து திரஸ்ட் பேடு, கன்மெட்டல் புஸ், சாப்ட் பொருத்துதல், பெயிண்ட் அடித்தல் போக்குவரத்து மற்றும் திரும்ப மாட்டுதல் | 27000 | 27000 | 28350 | 28350 | 29200 | 29200 |

மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு. எம். முத்துராமகிருஷ்ணன், ஸ்ரீவில்லிபுத்தூர் என்பவரின் விலைப்புள்ளியை ஒப்புக் கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ் குடிநீர் பிரிவு நிதியில் மோட்டார் பழுது பார்க்கப்பட்டதை மன்றம் பதிவு செய்யலாம்.

**ந.க.எண் 3711/2021/E1**

**<u>தீர்மானம் :- அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</u>**

## பொருள் எண் : 152

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள தண்ணீர் தேக்க தொட்டிக்கு நீர் ஏற்றும் 15 எச்.பி. மின் மோட்டார் பழுதடைந்துள்ளது, குடிநீர் விநியோக அவசர அவசியம் கருதி மேற்கண்ட மோட்டாரில் ரீ வைண்டிங், திரஸ்ட் பேடு, கன்மெட்டல் புஸ், சாப்ட் பொருத்துதல், பம்ப் இம்ப்ளர், பெயிண்ட் அடித்தல் போக்குவரத்து மற்றும் திரும்ப மாட்டுதல் மற்றும் இதர வேலைகள் உடனடியாக மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே மேற்கண்ட மோட்டார் உடனடியாக பழுது பார்க்கவும் அதற்கான செலவு தொகை ரூ.24,000/- க்கு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ் அனுமதிக்கப்பட்டது. அதன்படி மோட்டார் உடனடியாக பழுது பார்க்க பின்வரும் மூன்று நிறுவனங்களில் விலைப்புள்ளி பெறப்பட்டது.

| வ. எண் | பணி விவரம் | திரு. எம். முத்துராமகிருஷ்ணன், ஸ்ரீவில்லிபுத்தூர். | | செல்வம், எலக்ட்ரிக்கல்ஸ், ஸ்ரீவில்லிபுத்தூர். | | திரு. தங்கவேல், ஸ்ரீவில்லிபுத்தூர். | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 25 HP மோட்டார் கழற்றி ரி வைண்டிங் செய்து திரஸ்ட் பேடு, கன்மெட்டல் புஸ், சாப்ட் பொருத்துதல், பெயிண்ட் அடித்தல் போக்குவரத்து மற்றும் திரும்ப மாட்டுதல் | 24000 | 24000 | 25200 | 25200 | 25950 | 25950 |

மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு. எம். முத்துராமகிருஷ்ணன், ஸ்ரீவில்லிபுத்தூர் என்பவரின் விலைப்புள்ளியை அவசர அவசியம் கருதி ஒப்புக் கொள்ளப்பட்டதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.

**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**

1) அலுவலக வளாகத்தில் உள்ள தண்ணீர் தேக்க தொட்டிக்கு நீர் ஏற்றும் 15 எச்.பி. மின் மோட்டார் உடனடியாக பழுது பார்க்கவும் குடிநீர் பிரிவு நிதியில் அதற்கான செலவு தொகை ரூ.24,000/- க்கு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ் அனுமதிக்கப்பட்டதை பதிவு செய்யலாம்.
2) குறைந்த விலைப்புள்ளி ஒப்புக் கொள்ளப்பட்டதை மன்றம் அங்கீகாரம் செய்யலாம்.

**ந.க.எண் 3712/2021/E1**

**தீர்மானம் :- அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் எண் : 153

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சிக்கு வழங்க வேண்டிய SFC Grant மற்றும் Surcharges on Stamp Duty தொகையில் இருந்து குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்தப்பட வேண்டிய குடிநீர் கட்டணம் கீழ்க்கண்ட செயல்முறை ஆணையின்படி பிடித்தம் செய்யப்பட்டுள்ளது.

| வ.எண் | சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரின் செயல்முறை ஆணை | பிடித்தம் செய்யப்பட்ட தொகை |
|---|---|---|
| 1 | ந.க.எண் 7188/2020/LA3 Dated: 13.01.2021 | 5,00,000/- |
| 2 | ந.க.எண் 7188/2020/LA3 Dated: 05.02.2021 | 10,00,000/- |
| 3 | ந.க.எண் 8626/2021/LA3 Dated: 24.05.2021 | 8,00,000/- |
| 4 | ந.க.எண் 13009/2019/E3 Dated: 19.12.2021 | 2,00,000/- |
| 5 | ந.க.எண் 13009/2019/E3 Dated: 23.03.2021 | 8,00,000/- |
| | | **Rs. 33,00,000/-** |

மேற்படி பிடித்தம் செய்த தொகை வருவாய் நிதியில் சேர வேண்டிய தொகையாகும். தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு பிடித்தம் செய்யப்பட்ட தொகை ரூ.33,00,000/- ( ரூபாய் முப்பத்து மூன்று இலட்சம் மட்டும் ) குடிநீர் நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ளும் தொகையாகும். தற்பொழுது வருவாய் நிதியில் போதிய வசதி இல்லாத நிலையில் நகராட்சி பணியாளர்களின் PF, CPS, CPS CONTRUBUTION மற்றும் இதர பிடித்தங்கள் உரிய அரசு தலைப்பில் செலுத்தப்படாமல் மூன்று மாதங்களாக நிலுவையில் உள்ளது. இந்நிலையில் ஊதியத்திற்காக பெறப்படும் SFC Grant மற்றும் Surcharges on Stamp Duty மான்யத்தில் ரூ .33,00,000/- ( ரூபாய் முப்பத்து மூன்று இலட்சம் மட்டும் ) குடிநீர் கட்டணத்திற்காக பிடித்தம் செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட தொகை குடிநீர் நிதியில் இருந்து செலுத்த வேண்டிய தொகையானதால் தற்பொழுது நகராட்சியில் வருவாய் நிதி பற்றாக்குறையினை கருத்தில் கொண்டு ரூ.33,00,000/- ( ரூபாய் முப்பத்து மூன்று இலட்சம் மட்டும் ) குடிநீர் நிதியில் இருந்து வருவாய் நிதிக்கு மாற்றம் செய்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட தொகை ரூ.33,00,000/- ( ரூபாய் முப்பத்து மூன்று இலட்சம் மட்டும் ) குடிநீர் நிதியில் இருந்து வருவாய் நிதிக்கு மாற்றம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

   **(ந.க.எண் 213/2017/B1)**

**தீர்மானம் :- அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 154**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி அம்மா உணவகத்தின் பின்புறம் மிகவும் மோசமான நிலையில் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. அந்த இடத்தில் சுத்தப்படுத்தி தரைத்தளம் அமைத்து பாத்திரங்கள் வைக்கவும் பாத்திரங்கள் கழுவுவதற்கு தனியாக பைப் போட்டு மாற்றியமைக்கவும் மின் வசதி பழுது வேலைகள் செய்யவும் வேண்டியுள்ளது. மேற்கண்ட பணிகள் அவசர அவசியமாக உடன் செய்ய வேண்டியதிருப்பதால் ரூ.1,20,000/- மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ் மேற்கொள்ள விலைப்புள்ளிகள் பெற்று மேற்கொள்ள உத்திரவிடப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.

**அலுவலகக்குறிப்பு :-** பதிவு செய்யலாம்.
ந.க.எண் 3502/2021/E1

**தீர்மானம் :- அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**